ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

தொடர்பூட்டல் திணைக்களம்
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477311
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

வெளியிடுபவர் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்
திகதி 22.10.2015

## வெளிநாட்டுத் துறைச் செயலாற்றம் - ஓகத்து 2015

### பொதுநோக்கு

இலங்கையின் வெளிநாட்டுத் துறையானது, சிறிதளவு தாழ்ந்த வர்த்தகப் பற்றாக்குறை மற்றும் சுற்றுலா வருவாய்களில் காணப்பட்ட உத்வேகம் மிக்க வளர்ச்சி என்பனவற்றின் காரணமாக 2015 ஓகத்தில் மிதமான செயலாற்றமொன்றினை (ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில்) பிரதிபலித்தது. 2015இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் இறக்குமதிகளில் மெதுவான தன்மை காணப்பட்ட போதும் 2015 ஓகத்து இறுதியில் ஒன்று சேர்ந்த வர்த்தகப் பற்றாக்குறை 5.0 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு தளர்வடைந்த உலகளாவிய கேள்வியின் விளைவாக ஏற்றுமதிச் செயலாற்றம் சாதாரண நிலையில் காணப்பட்டமையே காரணமாகும். எனினும், சுற்றுலாவிலிருந்தான வருவாய்களில் ஏற்பட்ட வளர்ச்சியின் காரணமாக நடைமுறைக் கணக்கு நிலுவை செழிப்புற்றது. தோற்றம் பெற்றுவருகின்ற சந்தைகளில் அவதானிக்கப்பட்டவாறு, ஐக்கிய அமெரிக்காவின் வட்டி வீதங்களில் அதிகரிப்பு ஏற்படக்கூடிய சாத்தியங்களின் பின்னணியில் குறுங்கால வெளிநாட்டு முதலீடுகள் முடிவுறுத்தப்படாததன் விளைவாக நிதியியல் கணக்குகளுக்கான தேறிய உட்பாய்ச்சலானது மிதமடைந்தது. அதேவேளை, 2015 செத்தெம்பர் ஆரம்பத்திலிருந்து செலாவணி வீதத்தினை நிர்ணயிப்பதில் பெருமளவு நெகிழ்ச்சித் தன்மையினை அனுமதிப்பது என்ற மத்திய வங்கியின் தீர்மானம் வெளிநாட்டுத்துறை படிப்படியாக உத்வேகம் கொள்வதற்கு உதவும். இக்கொள்கை மாற்றமானது, வெளிநாட்டுத்துறையினை முக்கியமாக வர்த்தகக்கணக்கு மற்றும் நிதியியல் கணக்குகளை முன்னேற்றுவதனூடாக நாட்டின் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளினை வலுப்படுத்துவதற்கு வழிவகுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### ஏற்றுமதிச் செயலாற்றம்

2015 ஓகத்தில் ஏற்றுமதிகளிலிருந்தான மொத்த வருவாய்கள் ஐ.அ.டொலர் 799 மில்லியனாக விளங்கியது. இது ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 19.5 சதவீத வீழ்ச்சியைப் பிரதிபலித்து அனைத்து முக்கிய ஏற்றுமதி வருவாய்களிலும் ஏற்பட்ட வீழ்ச்சிகளைக் காட்டியது. தேயிலை, புடவைகள் மற்றும் ஆடைகள், போக்குவரத்து சாதனங்கள் மற்றும் இறப்பர் உற்பத்திகள் என்பனவற்றிலிருந்தான குறைந்த வருவாய்கள் இம்மாத காலத்தில் ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட ஒட்டுமொத்த வீழ்ச்சிக்கு முக்கியமாக பங்களித்தன. 2013 ஓகத்தில் தேயிலை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 92 மில்லியனுக்கு 33.9 சதவீதத்தினால்

வீழ்ச்சியடைந்தமைக்கு குறைந்த ஏற்றுமதியளவுகளினதும் தாழ்ந்த விலைகளினதும் இணைந்த தாக்கமே காரணமாகும். ருஷ்யா மற்றும் மத்திய கிழக்கிலிருந்தான தேயிலை ஏற்றுமதி வருவாய்கள் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் இம்மாத காலப்பகுதியில் முறையே 38.6 சதவீதத்தினாலும் 38.3 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தமைக்கு இந்நாடுகளின் எண்ணெய் வருவாய்களில் ஏற்பட்ட கணிசமமான வீழ்ச்சியே காரணமாகும். இம்மாதத்தின் ஏற்றுமதிகளில் அரைப் பங்கிற்கு வகைகூறிய புடவைகள் மற்றும் ஆடைகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் 6.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து, ஐரோப்பிய ஒன்றிய சந்தைகளுக்கான ஏற்றுமதி தொடர்ந்து ஆறாவது மாதமாதக குறைவடைந்தமையினைப் பிரதிபலிக்கின்றது. அதேவேளை, போக்குவரத்து சாதனங்களிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 85.9 சதவீத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு 2014 ஓகத்தில் உல்லாசப் பயணக்கப்பலொன்று ஏற்றுமதி செய்யப்பட்டிருந்தமையே முக்கிய காரணமாகும். இம்மாத காலப்பகுதியில் இறப்பர் உற்பத்திகளின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் வீழ்ச்சியடைந்தமைக்கு இறப்பர் டயர்களின் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சியே காரணமாகும். கடல் உணவு ஏற்றுமதிகள் 41.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு ஐரோப்பிய ஒன்றிய சந்தைக்கான கடல் உணவு ஏற்றுமதிகள் 88.3 சதவீத்தினால் வீழ்ச்சியடைந்தமை காரணமாக இருந்ததுடன் இது இலங்கையிலிருந்து ஐரோப்பிய ஒன்றியத்திற்கு ஏற்றுமதியாகும் மீன் உற்பத்திகளின் ஏற்றுமதி மீது விடுக்கப்பட்ட தடையின் தாக்கத்தினை பிரதிபலிப்பதாக இருந்தது. 2015 ஓகத்தில் பெற்றோலிய உற்பத்திகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் முன்னைய ஆண்டின் தொடர்பான மாதத்துடன் ஒப்பிடுகையில் 0.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள், பொறிகள் மற்றும் எந்திர சாதனங்கள், உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை என்பன இம்மாத காலப்பகுதியில் ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட ஒட்டுமொத்த வீழ்ச்சிக்கு பெருமளவிற்கு பங்களித்த ஏனைய ஏற்றுமதிவகைகளாக காணப்பட்டன. எனினும், வேளாண்மை ஏற்றுமதிகளின் கீழ் வகைப்படுத்தப்பட்ட வாசனைத்திரவியங்கள் மற்றும் தயாரிக்கப்படாத புகையிலையும், கைத்தொழில் உற்பத்தியில் வகைப்படுத்தப்பட்ட அச்சிடல் தொழில்துறை உற்பத்திகளும் இம்மாத காலப்பகுதியில் வளர்ச்சியினைப் பதிவுசெய்தன.

ஒன்றுசேர்த்த அடிப்படையில், 2015இன் முதல் எட்டுமாத காலப்பகுதியில் ஏற்றுமதி வருவாய்கள், ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில், ஐ.அ.டொலர் 7,147 மில்லியனுக்கு 3.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு பலயீனமாக உலகளாவிய கேள்வியே பெருமளவிற்கு காரணமாகும். 2015இன் முதல் எட்டுமாத காலப்பகுதியில் இலங்கையின் வணிக ஏற்றுமதிகளினது முதன்மைச் சந்தைகளாக ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், இந்தியா, ஜேர்மனி மற்றும் இத்தாலி என்பன விளங்கி மொத்த ஏற்றுமதிகளில் ஏறத்தாழ 51 சதவீதத்திற்கு வகைகூறின.

**அட்டவணை 1 – ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள்**

| வகை | ஓகத்து 2014 (ஐ.அ.டொ மில்) | ஓகத்து 2015 (ஐ.அ.டொ மில்) | மாற்றம் (%) | சனவரி - ஓகத்து 2014 (ஐ.அ.டொ மில்) | சனவரி - ஓகத்து 2015 (ஐ.அ.டொ மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **749.6** | **618.2** | **(17.5)** | **5,491.6** | **5,446.1** | **(0.8)** |
| புடவைகள் மற்றும் ஆடைகள் | 428.6 | 400.1 | (6.6) | 3,256.0 | 3,218.7 | (1.1) |
| இறப்பர் உற்பத்திகள் | 82.4 | 55.1 | (33.1) | 599.0 | 524.9 | (12.4) |
| இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் | 37.5 | 22.3 | (40.5) | 268.9 | 218.8 | (18.6) |
| பொறி மற்றும் இயந்திரவியல் சாதனங்கள் | 32.1 | 19.4 | (39.8) | 224.6 | 197.3 | (12.2) |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 32.7 | 4.6 | (85.9) | 98.4 | 219.7 | 123.2 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 25.3 | 25.3 | (0.2) | 237.8 | 289.4 | 21.7 |
| அச்சிடல் தொழில் துறை | 5.9 | 9.6 | 62.4 | 32.3 | 32.6 | 0.9 |
| உணவு குடிபானம் மற்றும் புகையிலை | 28.1 | 18.5 | (34.3) | 194.6 | 174.3 | (10.5) |
| ஏனையவை | 76.9 | 63.4 | (17.5) | 580.0 | 570.5 | (1.6) |
| **2. வேளாண்மை ஏற்றுமதிகள்** | **239.4** | **177.8** | **(25.8)** | **1,848.4** | **1,667.8** | **(9.8)** |
| தேயிலை | 138.9 | 91.8 | (33.9) | 1,083.1 | 901.2 | (16.8) |
| தேங்காய் | 35.0 | 29.5 | (15.9) | 233.9 | 238.0 | 1.8 |
| கடலுணவு | 19.8 | 11.5 | (41.7) | 176.4 | 112.5 | (36.2) |
| வாசனைத்திரவியம் | 24.1 | 30.1 | 24.7 | 161.0 | 249.3 | 54.8 |
| தயாரிக்கப்படாத புகையிலை | 3.0 | 3.3 | 8.8 | 27.5 | 22.5 | (18.2) |
| ஏனையவை | 18.6 | 11.6 | (37.5) | 166.5 | 144.4 | (13.3) |
| **3. கனிமங்கள் மற்றும் ஏனையவை** | **3.6** | **2.9** | **(19.3)** | **59.2** | **32.6** | **(44.9)** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **992.6** | **798.9** | **(19.5)** | **7,399.1** | **7,146.5** | **(3.4)** |

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்
தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை,
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள்
இலங்கை மத்திய வங்கி

**இறக்குமதி செயலாற்றம்**

2015 ஓகத்தில் இறக்குமதிகள் மீதான செலவினம், ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் ஐ.அ.டொலர் 1,523 மில்லியனுக்கு 11.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. நுகர்வுப்பொருட்கள் மற்றும் முதலீட்டுப் பொருட்கள் மீதான இறக்குமதிச் செயலாற்றத்தில் கணிசமானளவு விரிவாக்கம் காணப்பட்டபோதும் இடைநிலைப்பொருட்களின் இறக்குமதிகளில் கணிசமானளவு குறைப்பு காணப்பட்டமைக்கு எரிபொருளின் இறக்குமதிகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சி முக்கிய காரணமாக அமைந்து இவ்வீழ்ச்சிக்கு வழிவகுத்தது. 2015 ஓகத்தில் பன்னாட்டு எண்ணெய் உற்பத்திகள் கடந்த ஆறு ஆண்டுகளில் மிகக் குறைந்த மட்டத்திற்கு வீழ்ச்சியடைந்தமையானது சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியத்தின் இறக்குமதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சியுடன் சேர்ந்து எரிபொருள் இறக்குமதிச் செலவின் 60.5 சதவீதம் கொண்ட குறைப்பிற்கு காரணமாகியது. மேலும் புடவை மற்றும் புடவைப் பொருட்கள், கோதுமை மற்றும் சோளம் என்பன மீதான செலவினம் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் முறையே 28.0 சதவீததினாலும் 65.5 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்து, 2015 ஓகத்தில் இறக்குமதிச் செயலாற்றத்தின் வீழ்ச்சிக்கு கணிசமானளவிற்கு பங்களித்தது.

தனிப்பட்ட பயன்பாட்டிற்கான உந்து ஊர்திகளின் இறக்குமதி மீதான செலவினத்தில் ஏற்பட்ட 56.9 சதவீதமான அதிகரிப்பு நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிகளில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு முக்கியமாக பங்களித்தது. பொறிகள் மற்றும் சாதனங்கள் மற்றும் கட்டிடப்பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினத்தில் சிறிதளவு வீழ்ச்சி காணப்பட்டபோதும் போக்குவரத்துச் சாதனங்களின் இறக்குமதியில் ஏற்பட்ட 95.0 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பு முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதியில் ஏற்பட்ட 8.9 சதவீதம் கொண்ட அதிகரிப்பிற்கு பங்களித்தது. முச்சில்லு வண்டிகள் மற்றும் உழுபொறிகளின் இறக்குமதி மீதான உயர்ந்த செலவினம் போக்குவரத்துச் சாதனங்களின் இறக்குமதியில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு முக்கியமாகப் பங்களித்தது.


பன்னாட்டு பண்டவிலைகளில் குறிப்பாக, எரிபொருட்களின் விலைகளில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி காணப்பட்ட போதும் ஒன்றுசேர்த்த அடிப்படையில், 2015இன் முதல் எட்டுமாத காலப்பகுதியில் இறக்குமதிகள் மீதான செலவினம் ஐ.அ.டொலர் 4 மில்லியனால் ஐ.அ.டொலர் 12,559 மில்லியனுக்கு அதிகரித்தது. 2015 சனவரியிலிருந்து ஓகத்து வரையான காலப்பகுதியில் முக்கியமாக இறக்குமதி நாடுகளான இந்தியா, சீனா, யப்பான், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் சிங்கப்பூர் என்பன விளங்கி மொத்த இறக்குமதிகளில் ஏறத்தாள 61 சதவீதத்திற்கு வகை கூறின.


## அட்டவணை 2 - இறக்குமதிகள் மீதான செலவினம்

| வகை | ஓகத்து 2014 (ஐ.அ.டொ மில்) | ஓகத்து 2015 (ஐ.அ.டொ மில்) | மாற்றம் (%) | சனவரி - ஓகத்து 2014 (ஐ.அ.டொ மில்) | சனவரி - ஓகத்து 2015 (ஐ.அ.டொ மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. நுகர்வுப் பொருட்கள்** | **327.8** | **420.3** | **28.2** | **2,288.3** | **3,142.4** | **37.3** |
| உணவு மற்றும் குடிபானங்கள் | 121.8 | 121.1 | (0.6) | 995.6 | 1,124.4 | 12.9 |
| சீனி மற்றும் இனிப்புப் பொருட்கள் | 26.9 | 22.0 | (18.1) | 204.1 | 186.9 | (8.4) |
| தானியங்கள் மற்றும் அரைக்கும் உற்பத்திப் பொருட்கள் | 13.1 | 2.0 | (84.8) | 86.8 | 138.8 | 60.0 |
| பால் உற்பத்திகள் | 23.5 | 23.8 | 1.2 | 237.6 | 169.6 | (28.6) |
| ஏனைய உணவு மற்றும் குடிபானங்கள் | 58.2 | 73.3 | 25.8 | 467.1 | 629.1 | 34.7 |
| உணவல்லாத நுகர்வுப் பொருட்கள் | 206.1 | 299.2 | 45.2 | 1,292.7 | 2,018.0 | 56.1 |
| மருந்து மற்றும் மருந்தாக்கல் பொருட்கள் | 31.5 | 36.9 | 17.0 | 248.1 | 304.7 | 22.8 |
| வாகனங்கள் | 102.2 | 160.3 | 56.9 | 476.4 | 904.6 | 89.9 |
| ஏனைய உணவல்லா நுகரக்கூடியவைகள் | 72.4 | 102.1 | 41.0 | 568.2 | 808.7 | 42.3 |
| **2. இடைநிலைப் பொருட்கள்** | **1,061.5** | **738.7** | **(30.4)** | **7,738.9** | **6,397.2** | **(17.3)** |
| எரிபொருள் | 472.0 | 186.5 | (60.5) | 3,448.5 | 1,789.3 | (48.1) |
| புடவைகள் மற்றும் ஆடைப்பொருட்கள் | 214.3 | 154.2 | (28.0) | 1,469.7 | 1,547.4 | 5.3 |
| இரசாயனப் பொருட்கள் | 69.5 | 84.0 | 20.9 | 512.5 | 585.8 | 14.3 |
| பிளாத்திக்கு மற்றும் அதன் பகுதிகள் | 52.8 | 55.6 | 5.2 | 386.0 | 408.7 | 5.9 |
| கனிம பொருட்கள் | 11.9 | 10.5 | (11.8) | 152.4 | 136.5 | (10.4) |
| இறப்பர் மற்றும் அது தொடர்பான பொருட்கள் | 17.9 | 47.0 | 162.1 | 102.2 | 185.3 | 81.3 |
| கோதுமை மற்றும் சோளம் | 40.8 | 14.1 | (65.5) | 268.0 | 214.0 | (20.1) |
| வளமாக்கி | 10.2 | 15.8 | 53.8 | 163.2 | 162.0 | (0.7) |
| ஏனையவை | 172.1 | 171.1 | (0.5) | 1,236.5 | 1,368.3 | 10.7 |
| **3. முதலீட்டுப் பொருட்கள்** | **334.0** | **363.8** | **8.9** | **2,519.0** | **3,007.4** | **19.4** |
| பொறி மற்றும் கருவிகள் | 170.4 | 161.1 | (5.5) | 1,369.0 | 1,482.9 | 8.3 |
| கட்டடப் பொருட்கள் | 122.1 | 121.9 | (0.2) | 837.2 | 845.1 | 1.0 |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 41.3 | 80.5 | 95.0 | 310.7 | 676.3 | 117.7 |
| ஏனையவை | 0.2 | 0.3 | 59.6 | 2.1 | 3.0 | 41.1 |
| **4. வகைப்படுத்தப்படாதவை** | **1.2** | **0.5** | **(53.8)** | **8.6** | **11.5** | **34.3** |
| **மொத்த இறக்குமதிகள்** | **1,724.5** | **1,523.4** | **(11.7)** | **12,554.8** | **12,558.6** | **0.0** |

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்,
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லங்கா ஐஓசி பிஎல்சி
இலங்கை மத்திய வங்கி.

**வரைபடம் 1: ஏற்றுமதி மற்றும் இறக்குமதிச் செயலாற்றம்**




மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி,
இலங்கைச் சுங்கம்.

**வர்த்தக மீதி**

2015 ஓகத்தில் வர்த்தகக் கணக்கின் பற்றாக்குறை 2014இல் பதிவு செய்யப்பட்ட ஐ.அ.டொலர் 732 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 724 மில்லியனுக்கு 1.0 சதவீதத்தினால் சிறிதளவு சுருக்கமடைந்தது. எனினும், ஒன்றுசேர்ந்த அடிப்படையில் 2015இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் வர்த்தகப் பற்றாக்குறை ஐ.அ.டொலர் 5,412 மில்லியனுக்கு 5.0 சதவீதத்தினால் அதிகரித்தது.

**சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள்**

2015 செத்தெம்பரில் சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 143,374 ஆக விளங்கி தொடர்ந்தும் உத்வேகம் மிக்க வளர்ச்சியை கொண்டிருந்ததுடன் 35.9 சதவீதம் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியைப் பதிவுசெய்தது. ஆண்டின் முதல் மூன்று காலாண்டுகளின் போது சுற்றுலாப் பயணிகளின் வருகைகளின் மொத்தம் 1,315,839ஆக விளங்கி 2014இன் தொடர்பான காலப்பகுதியினைவிட 18.8 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பிரதிபலித்தது. சுற்றுலாப் பயணிகள் வருகைதரும் முதல் பத்து நாடுகளில் மலேசியா தவிர்ந்த மற்றைய அனைத்து நாடுகளும் 18 - 48 சதவீதம் வரையான வளர்ச்சியினைப் பதிவுசெய்தன. 2015 செத்தெம்பரில் சுற்றுலாப் பயணிகளின் பெரும் தொகையானவர்கள் இந்தியா, சீனா, மற்றும் ஜேர்மனி என்பனவற்றிலிருந்து பதிவுசெய்யப்பட்டபோதும் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் உயர்நத வளர்ச்சி வீதங்கள் இஸ்ரேல் (185.1 சதவீதம்) குவைத் (91.4 சதவீதம்) மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் (73.3 சதவீதம்) ஆகிய நாடுகளிலிருந்தான வருகைகளில் அவதானிக்கப்பட்டன. இது கடந்த காலத்தில் சுற்றுலாப் பயணிகளின் பாரம்பரிய மூலங்களாக இல்லாத நாடுகள் பயன்படுத்தப்படாத உள்ளார்ந்த வளங்களைக் கொண்டிருப்பதனைப் பிரதிபலிப்பதாகவுள்ளது.

சுற்றுலாப் பயணிகளின் வருகைகளில் அவதானிக்கப்பட்ட வளர்ச்சியினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள்[1] 2015 செத்தெம்பரில் ஐ.அ.டொலர் 228 மில்லியனாக விளங்கி 31.9

[1] இலங்கை சுற்றுலா அபிவிருத்திச் சபை அதன் சராசரித் தங்கியிருக்கும் காலம் மற்றும் நாளொன்றிற்கான சராசரிச் செலவு தொடர்பான 2015ஆம் ஆண்டிற்கான மதிப்பீடுகள் பற்றிய அளவீட்டினை இத்தற்காலிக மதிப்பீட்டினை திருத்தியதாக இருக்கும்.

சதவீதம் கொண்ட மிக உயர்ந்த வளர்ச்சியினைப் பதிவுசெய்தன. முதல் மூன்று காலாண்டுகளிலும் சுற்றுலாவிலிருந்தான ஒன்றுசேர்த்த வருவாய்கள் 2014இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 1,763 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 2,095 மில்லியனுக்கு 18.8 சதவீதத்தினால் அதிகரித்திருப்பதாக மதிப்பிடப்பட்டது.

**தொழிலாளர் பணவனுப்பல்கள்**

2015 ஓகத்தில், தொழிலாளர் பணவனுப்பல்களின் வளர்ச்சிவேகம் 2014 ஓகத்தின் ஐ.அ.டொலர் 548 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 566 மில்லியனுக்கு உயர்வடைந்து வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சலை 3.3 சதவீதத்தினால் மீட்சியடையச் செய்தது. ஒன்றுசேர்ந்த அடிப்படையில், 2015 ஓகத்து வரையான தொழிலாளர் பணவனுப்பல்கள் ஐ.அ.டொலர் 4,598 மில்லியனாக விளங்கி 2014இன் தொடர்பான காலப்பகுதியைவிட 1.8 சதவீதம் கொண்ட வளர்ச்சியை பதிவுசெய்தன.

**நிதியியல் உட்பாய்ச்சல்கள்**

2015இன் முதல் ஒன்பதுமாத காலப்பகுதியில், அரச பிணையங்கள் சந்தையின் வெளிநாட்டு முதலீடுகள், 2014இன் இதேகாலப்பகுதியில் காணப்பட்ட ஐ.அ.டொலர் 100 மில்லியனைக் கொண்ட தேறிய உட்பாய்ச்சலுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 920 மில்லியனை கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சல்களைப் பதிவுசெய்தன. கொழும்பு பங்குப் பரிவர்த்தனை 2015 செத்தெம்பர் இறுதிவரை ஐ.அ.டொலர் 9.2 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சலைப் பதிவுசெய்தது. இது, இரண்டாந்தரச் சந்தையிலிருந்தான ஐ.அ.டொலர் 23.4 மில்லியன் கொண்ட வெளிநாட்டு முதலீடுகளின் தேறிய வெளிப்பாய்ச்சலையும் முதலாந்தர சந்தைக்கான ஐ.அ.டொலர் 32.6 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சலையும் உள்ளடக்கியிருந்தது. அமெரிக்க வட்டிவீதங்களில் உயர்வு ஏற்படக்கூடிய சாத்தியங்களின் பின்னணியில் சொத்துப்பட்டியல்கள் மீள் சமனிலைப்படுத்தப்படுவதன் விளைவாக கடந்த ஒருசில மாதங்களாக வெளிநாட்டு முதலீடுகள் தொடர்ந்து குறைந்தளவிலேயே காணப்படுகின்றன. 2015இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில், அரசிற்கான நீண்ட காலக் கடன்கள், 2014இன் இதே காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 653 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சலுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 193 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சலை பதிவுசெய்தது.

**கொடுப்பனவு நிலைமையின் திரண்ட நிலுவை**

2015இன் முதல் எட்டு மாதகாலப்பகுதியில் திரண்ட சென்மதி நிலுவை முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 2,150 மில்லியன் கொண்ட மிகையுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 1,795 மில்லியன் கொண்ட திரண்ட பற்றாக்குறையை பதிவுசெய்யுமென மதிப்பிடப்பட்டது.

**பன்னாட்டு ஒதுக்குகளும் செலாவணி வீத அசைவும்**

2015 ஓகத்து இறுதியில் இலங்கையின் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் ஐ.அ.டொலர் 6.5 பில்லியனாக விளங்கி 4.0 மாத இறக்குமதிகளுக்குப் போதுமானதாகக் காணப்பட்டதுடன் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் ஐ.அ.டொலர் 8.2 பில்லியனாக அமைந்து 5.1 மாத இறக்குமதிகளுக்குச் சமனாக காணப்பட்டன. அதேவேளை, செலாவணி வீதத்தினை நிர்ணயிப்பதில் பெருமளவு நெகிழ்ச்சித்தள்மையினை புகுத்துவதற்கு 2015 செத்தெம்பர் 4இல் மத்திய வங்கி தீர்மானித்தமையினைத் தொடர்ந்து இலங்கை ரூபா 4.6 சதவீதத்தினால் தேய்வடைந்தமையானது 2015 ஓகத்து 21ம் நாள் வரையான இவ்வாண்டுப் பகுதியில் 7.1 சதவீதம் கொண்ட ஒட்டுமொத்த தேய்வினை ஏற்படுத்தியிருந்தது. இவ்வாண்டுப்பகுதியில் குறுக்கு நாணய

செலவாணி வீத அசைவுகளின் அடிப்படையில், இலங்கை ரூபா அவுஸ்ரேலிய டொலருக்கெதிராக 5.0 சதவீதத்தினாலும் கனடிய டொலருக்கெதிராக 4.1 சதவீத்தினாலும் உயர்வடைந்த வேளையில் யப்பானிய யென்னிற்கெதிராக 6.6 சதவீதத்தினாலும் ஸ்ரேலிங் பவுணுக்கெதிராக 6.3 சதவீதத்தினாலும் யூரோவிற்கெதிராக 0.4 சதவீதத்தினாலும் இந்திய ரூபாவிற்கெதிராக 4.5 சதவீத்தினாலும் தேய்வடைந்தது.

### அட்டவணை 3: வெளிநாட்டுத்துறைச் செயலாற்றத்தின் தொகுப்பு (அ)

| வகை | ஓகத்து 2014 (ஐ.அ.டொ மில்) | ஓகத்து 2015 (ஐ.அ.டொ மில்) | மாற்றம் (%) | சனவரி – ஓகத்து 2014 (ஐ.அ.டொ மில்) | சனவரி – ஓகத்து 2015 (ஐ.அ.டொ மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| ஏற்றுமதிகள் | 992.6 | 798.9 | (19.5) | 7,399.1 | 7,146.5 | -3.4 |
| இறக்குமதிகள் | 1,724.5 | 1,523.4 | (11.7) | 12,554.8 | 12,558.6 | 0.0 |
| வர்த்தக மீதி | (731.9) | (724.5) | (1.0) | (5,155.7) | (5,412.0) | 5.0 |
| சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் | 223.4(ஆ) | 265.2 | 18.7 | 1,594.5 | 1,866.5 | 17.1 |
| தொழிலாளர் பணவனுப்பல்கள் | 548.15 | 566.0 | 3.3 | 4,514.7 | 4,598.0 | 1.8 |
| கொழும்பு பங்குப் பரிவர்த்தனைக்கான உட்பாய்ச்சல்கள் (தேறிய) (இ) | (27.6) | (32.2) | 16.7 | 56.7 | 7.8 | (86.2) |
| அரசாங்கத்திற்கான உட்பாய்ச்சல்கள் (ஈ) *இதில்,* | 202.7 | 468.6 | 131.2 | 4,297.7 | 2,380.6 | (44.6) |
| தி.உண்டியல்கள் மற்றும் தி.முறிகள் | 137.2 | 372.1 | 171.2 | 1,546.8 | 1,003.4 | (35.1) |
| நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் | - | - | - | 1,500.0 | 650.0 | (56.7) |
| நீண்ட காலக் கடன்கள் | 65.0 | 96.4 | 48.3 | 1,184.0 | 703.1 | (40.6) |

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்
இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை
கொழும்பு பங்குப் பரிவர்த்தனை
இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகமானது.
(ஆ) திருத்தப்பட்டது.
(இ) இரண்டாந்தரம் மற்றும் முதனிலைச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது.
(ஈ) அரசாங்கத்திற்கான உட்பாய்ச்சல்கள், அரசாங்கத்திற்கான மூலதனம் மற்றும் நடைமுறை மாற்றல்கள், வெளிநாட்டு முதலீட்டாளர்களின் திறைசேரி உண்டியல்கள், திறைசேரி முறிகள், நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் என்பனவற்றின் விற்பனையிலிருந்தான உட்பாய்ச்சல்கள் மற்றும் அரசாங்கத்தின் நீண்ட காலக் கடன்கள் என்பனவற்றை உள்ளடக்குகின்றன.